


**09. 08. 2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. சகோதரத்துவத்தை வலியுறுத்தும் ரக்ஷா பந்தன் நாடுமுழுவதும் இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

2. ராணுவ தளவாட உற்பத்தி சென்ற நிதியாண்டு ஒருலட்சத்து 51 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்து சாதனை படைத்துள்ளதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

3. தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் சமச்சீரான வளர்ச்சியை அரசு உறுதிசெய்வதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. நாட்டின் முதல் பசுமை துறைமுகமாக தூத்துக்குடி துறைமுகம் விரைவில் உருவெடுக்கும் என்று துறைமுக ஆணையம் தெரிவித்துள்ளது.

5. ஆஸ்திரியாவில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் மகளிர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் ரியாபாட்டியா, செக்குடியரசின் **Bayerlova** இணை - ஸ்லோவேனியாவின் **Dalila, Nika** இணையை இன்று எதிர்கொள்கிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖

<u>ரக்ஷா பந்தன்</u>

சகோதரத்துவத்தை வலியுறுத்தும் ரக்ஷா பந்தன் நாடுமுழுவதும் இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்ட வாழ்த்து செய்தியில், சகோதர சகோதரிகளுக்கிடையே அன்பையும் நம்பிக்கையையும் வலுப்படுத்தும் இந்நன்னாளில் அனைவரும் நாட்டின் கலாச்சார பாரம்பரிய மாண்புகளை மதித்து மகளிர் உரிமைக்கு குரல்கொடுக்க அழைப்பு விடுத்தார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி அனைவருக்கும் இனிய ரக்ஷாபந்தன் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை பறைசாற்றும் வகையில் அம்ரித்சரிலிருந்து நூற்றுக்கணக்கான ராக்கி கயிறுகள் பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இதனிடையே எல்லைப்பகுதிகளில் எல்லை பாதுகாப்பு படையினர், மத்திய ரிசர்வ் காவல்படையினருக்கு, அப்பகுதிகளை சேர்ந்த மக்கள் ராக்கி கயிறுகளை கட்டி வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

❖❖❖❖❖❖❖

<u>சமஸ்கிருத மொழி</u>

சமஸ்கிருத மொழி அறிவுசார் திறமையின் ஆதாரமாக திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

உலக சமஸ்கிருத மொழிதினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி வாழ்த்து தெரிவித்துள்ள பிரதமர், நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் சமஸ்கிருத மொழியை பிரபலப்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை தமது தலைமையிலான அரசு மேற்கொண்டதாக எடுத்துரைத்தார்.

இதனொரு பகுதியாக சமஸ்கிருத கை பிரதிகளை மின்னணுமாக்கும் முயற்சிகளை அரசு மேற்கொண்டு உள்ளதாக குறிப்பிட்டார்.

மத்திய சமஸ்கிருத பல்கலைக் கழகங்கள் மற்றும் கற்றல் மையங்கள், சமஸ்கிருத மொழியாளர்களுக்கான சலுகைகள் போன்ற அரசின் முயற்சிகளையும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இந்நடவடிக்கைகளால் எண்ணற்ற மாணாக்கரும், ஆராய்ச்சியாளர்களும் பயனடைந்ததாக அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

சமஸ்கிருத மொழியை பிரபலப்படுத்தும் அனைத்து தரப்பினரின் முயற்சிகளை இந்நாளில் பாராட்டுவதாக அவர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

<u>வெள்ளையனே வெளியேறு இயக்கம்</u>

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 83-வது நினைவு தினத்தை ஒட்டி அந்த இயக்கத்தில் பங்கேற்று துணிச்சலுடன் செயலாற்றிய அனைவருக்கும் பிரதமர் திரு. நரேந்திரமோடி நன்றி தெரிவித்துக்கொண்டுள்ளார்.

மகாத்மா காந்தியடிகளின் சீரிய தலைமையில் தேசப்பற்றை தூண்டியதன் மூலம், விடுதலைக்கான வேட்கையிலிருந்த எண்ணற்ற மக்களை இந்த இயக்கம் ஒருங்கிணைத்ததாக பிரதமர் புகழாரம் சூட்டினார்.

❖❖❖❖❖❖❖

<u>ராஜ்நாத் சிங்</u>

தேசிய ராணுவ தளவாட உற்பத்தி இதுவரை இல்லாத அளவாக சென்ற நிதியாண்டு ஒருலட்சத்து 51 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

இது அதற்கு முந்தைய ஆண்டை காட்டிலும் 18 சதவிகிதம் அதிகமாகும் என்றும தமது சமூக வலைதள பதிவில் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சாதனை வளர்ச்சிக்கு நாட்டின் ராணுவ தளவாட தொழிற்சாலை கட்டமைப்பை அரசு வலுப்படுத்தியதே காரணம் என்றும் அவர் எடுத்துரைத்தார்.

பாதுகாப்பு அமைச்சகத்தின் ராணுவ உற்பத்தி பிரிவையும், இதர பங்குதாரர்களையும் அமைச்சர் பாராட்டியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

<u>அஷ்விணி வைஷ்ணவ்</u>

பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின் கீழ் சமையல் எரிவாயு நுகர்வோர்களுக்கு நடப்பு நிதியாண்டு மானியம் வழங்குவதற்காக 12 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசியஅவர், தற்போது 10 கோடியே 33 லட்சம் குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்து வரும் நிலையில் இத்திட்டத்தின்கீழ் ஆண்டொன்றுக்கு 9 சிலிண்டர்களுக்கு தலா 300 ரூபாய் மானியம் வழங்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖

<u>எல்.முருகன்</u>

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் நீலகிரி மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இல்லந்தோறும் மூவர்ணகொடி ஹர்கர் திரங்கா நிகழ்ச்சியில் இன்று பங்கேற்கிறார்.

❖❖❖❖❖❖❖

<u>ரயில்வே கட்டணம்</u>

ரயில் பிரயாணங்களில் ஒரு இடத்திற்கு சென்று திரும்புவதற்காக இருமார்க்கங்களிலும் பயணச்சீட்டை முன்பதிவு செய்யும் பயணிகளுக்கு திரும்பிவரும் கட்டணத்தில் 20 சதவிகித தள்ளுபடி வழங்கப்படும் என ரயில்வே அறிவித்துள்ளது.

இந்த பயணச்சீட்டை ரத்து செய்தால் ரயில் கட்டணத் தொகை திருப்பி வழங்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக வரும் அக்டோபர் 13-ம் தேதி பயணத்திற்காக வரும் 14-ம் தேதியிலிருந்து முன்பதிவு செய்யும் பயணிகளுக்கு இந்த தள்ளுபடி சலுகை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

❖❖❖❖❖❖❖

<u>ஜோதி</u>

மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் 91-வது பிறந்தநாள் வரும் 20-ம் தேதி கொண்டாடப்படும் நிலையில், காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூரிலுள்ள அன்னாரது நினைவிடத்திலிருந்து 34-ம் ஆண்டு நினைவு ஜோதி யாத்திரை இன்று தொடங்கியது.

தில்லியில் காங்கிரஸ் மூத்ததலைவர் திருமதி.சோனியாகாந்தி மற்றும் கட்சித்தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே ஆகியோரிடம் இந்த ஜோதி ஒப்படைக்கப்பட உள்ளது.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் சமச்சீரான வளர்ச்சியை அரசு உறுதிசெய்வதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை பல்லாவரத்தில் பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களை இன்று வழங்கி பேசியஅவர், கடந்த 4 ஆண்டுகளில் 17 லட்சத்து 74 ஆயிரம் பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

இரட்டை இலக்கத்துடன் நாட்டிலேயே பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் முதலிடத்தில் உள்ளதாக கூறினார்.

மாநிலத்தில் கல்வி மற்றும் மருத்துவ சேவைகளுக்கு உயர்முன்னுரிமை வழங்கப் படுவதாகவும் முதலமைச்சர் எடுத்துரைத்தார்.

முன்னதாக 139 கோடி ரூபாய் மதிப்பில் அதிநவீன வசதிகளுடன் கூடிய தாம்பரம் அரசு தலைமை மருத்துவமனையை திறந்துவைத்த முதலமைச்சர், ஏழரை கோடி ரூபாய் மதிப்பிலான பல் மருத்துவமனை கட்டடங்களையும் திறந்துவைத்தார்.

ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான ஒருங்கிணைந்த பொதுசுகாதார ஆய்வகம் உள்ளிட்டவையும் இதில் அடங்கும்.

❖❖❖❖❖❖❖

எஸ்.எஸ்.சிவசங்கர்

அரியலூர் மாவட்டத்தில் தமிழக அரசின் நலன்காக்கும் மருத்துவ முகாமை மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் இன்று நேரில் ஆய்வுசெய்தார்.

உயர்மருத்துவ சேவைகளுக்கான இம்முகாமை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ள அறிவுறுத்திய அவர், கர்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களையும் வழங்கினார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் இம்முகாமை ஆய்வுசெய்த மாநில சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. நாசர், மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖

அன்பில் மகேஷ்

தமிழகத்தில் மக்கள் நலனுக்கான பல்வேறு திட்டங்கள் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருச்சி, காட்டூர் உருமு தனலெட்சுமி கலைக்கல்லூரியில் இன்று அரசின் நலன்காக்கும் திட்ட முகாமை தொடங்கிவைத்து பேசியஅவர், மக்களுக்கான மிகப்பெரிய சுகாதார திட்டமாக இது விளங்கும் என்றார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர், மாணவர்களின் அழுத்தத்தை குறைப்பதற்காகவே 11-ம் வகுப்பு பொதுத்தேர்வு ரத்து செய்யப்பட்டதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖

துறைமுகம்

தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் மெத்தனால் தேவைக்கான பசுமை கிடங்கு அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாக துறைமுக ஆணையத் துணைத்தலைவர் திரு. ராஜேஷ் சவுந்தர்ராஜன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் பெருக்கத்தால் துறைமுக வளர்ச்சி மேம்படும் என்றார்.

இன்னும் 5 ஆண்டுகளுக்குள் துறைமுகத்தில் 5 மில்லியன் டன் பசுமை அமோனியா உற்பத்தி நடைபெறும் என்று கூறியஅவர், தூத்துக்குடியிலிருந்து பசுமை எரிபொருட்கள் மூலமான கப்பல்கள் இயக்கமும் நடைமுறைப்படுத்தப்படும் என்றார்.

துறைமுகத்தில் மேலும் 6 மெகாவாட் காற்றாலை மின் உற்பத்தி திட்டப்பணிகள் நடைபெறுவதாகவும், உற்பத்தி தொடங்கியவுடன் நாட்டின் முதல் பசுமை துறைமுகமாக தூத்துக்குடி துறைமுகம் உருவெடுக்கும் என்றார்.

7 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வெளிதுறைமுக வளர்ச்சித்திட்டம் மறு வடிவமைப்பு செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

சிவகங்கை வாய்ஸ்

சிவகங்கை மாவட்டத்தில் இரண்டாம் கட்ட தேசிய குடற்புழு நீக்க முகாம் நாளைமறுநாள் நடைபெறவுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி. பொற்கொடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

இருவரி

புதுக்கோட்டை மாவட்டத்தில் திருக்குறள் திருப்பணிகள் திட்ட செயலாக்கம் குறித்த கண்காணிப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. அருணா தலைமையில் இன்று நடைபெற்றது.

வேலூர் மாவட்டம் காட்பாடியில் இன்று நடைபெற்ற போதைப்பொருள் விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டத்தில் மாணாக்கர், பொதுமக்கள், காவல்துறையினர் பங்கேற்றனர்.

போதைப் பொருள் இல்லா தமிழகத்தை வலியுறுத்தி நாமக்கல் நூற்றாண்டு புதிய பேருந்து நிலையத்தில் வாகனங்களில் விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஒட்டும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி இன்று தொடங்கிவைத்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தாட்கோ வழங்கும் இலவச அழகுக்கலை பயிற்சியில் பங்கேற்க விரும்பும் தகுதியுடையவர்கள் அதன் இணையதளத்தில் இம்மாத இறுதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

வானிலை

வளிமண்டல சுழற்சி காரணமாக தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், ஈரோடு, சேலம் மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

தென்தமிழக கடலோரம், மன்னார் வளைகுடா, குமரிக்கடல், தென்மேற்கு, தென்கிழக்கு வங்ககடல் பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அடுத்த 5 நாட்களுக்கு இப்பகுதிகளுக்கு செல்லவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

அலைச்சறுக்கு

மகாபலிபுரத்தில் நடைபெறும் ஆடவர் ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன்பட்ட போட்டியின் இறுதியாட்டத்திற்கு இந்தியாவின் ரமேஷ் புதிஹால் மற்றும் கிஷோர்குமார் முன்னேறியுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

ஆஸ்திரியாவில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் மகளிர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் ரியாபாட்டியா, செக்குடியரசின் **Bayerlova** இணை - ஸ்லோவேனியாவின் **Dalila, Nika** இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

கபடி

திருவாரூர் மாவட்டம் வடுவூரில் மாநில அளவிலான 26-வது கபடி போட்டிகள் நேற்று நள்ளிரவு தொடங்கின.

திருச்சி, திருவாரூர், நாகை, தஞ்சை, சென்னை, கன்னியாகுமரி, மதுரை, புதுக்கோட்டை உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த 26 அணிகள் இதில் பங்கேற்றுள்ளன.

2 நாட்கள் நடைபெறும் இப்போட்டிகள் நாக்அவுட் முறையில் நடத்தப்படுகின்றன.

❖❖❖❖❖❖❖